

யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும்
உரும்பிராய் மற்றும் கொழும்பை
வசிப்பிடமாக கொண்ட



திருமதி. **சோதி இராசநாயகம்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## In Loving Memory of late

# Mrs.Sothy Rasanayagam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை மடியில்
10
06
1938

ஆண்டவன் அடியில்
16
06
2020



# அமரர் சோதி இராசநாயகம்

## திதி வெண்பா

ஆண்டு சார்வரி ஆனித்திங்கள் இரண்டாம் நாள்
ஈண்டு அபரபக்க தசமித்திதி ரேவதியில் - நீண்ட புகழ்
சோதி நல்லாள் நிலையான சுகம் வேண்டி
ஜோதியில் கலந்தாள் காண்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும்
உரும்பிராய் மற்றும் கொழும்பை
வசிப்பிடமாகவும்
கொண்ட
அமரர்
திருமதி. **சோதி இராசநாயகம்**
அவர்களின்

# நினைவு மலர்

In Loving Memory Of Late
**Mrs. Sothy Rasanayagam**

## 16.07.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தெய்வீக தாய்க்கு சமர்ப்பணம்

தெய்வ உள்ளம்

கொண்ட எங்கள் தாயாக விளங்கி

எம் வாழ்வுற்கும் வளர்ச்சிக்கும்

உறுதுணையாய் விளங்கி

அன்போடும் பண்போடும்

எம்மைப் பேணிக் காத்து

நல்வழியே நடந்த

எங்கள் அன்பு தாய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்
கோலம் செய் துங்கக் கரிமுகத்துத் - தூ
மணியே நீயெனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா

## பஞ்சபுராணம்

### தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட் பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்மையே பெருக்கிப்பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

### திருவிசைப்பா

தன தனத் தோழா சங்கரா சூல பாணியே
தாணுவே சிவனே
கனக நற்றூனே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்று உடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத்து அமரசேகரனுள்
உனகழ வினையின் என் நெஞ்சினில் இனிதாத்
தொண்டனேன் நுகருமாநுகரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுலக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடி
ஒழுக்கருள் புரிந்து
பின்னை பிறவியறுக்க நெறிதந்த பித்தற்கு
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி ஏவரும் துதிக்க நின்ற ஈறாது தோள் போற்றி காஞ்சிமாவடி வைக்குஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான் சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

## திருப்புகழ்

வசனமிகவேற்றி மறவாதே
மனது துயராற்றி லுழலாதே
இசை பயில் சடா ரமதாலே
இகபர சௌபாக்ய மருள்வாயே
பசுபதி சிவாக்ய முணர்வோனே
பழநி மலை வீற்றருளும் வேலா
அசுரர் கிளைவாட்டி மிகவாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே

## வாழ்த்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

1938ம் ஆண்டு ஆனி பத்தாம் திகதிதனில் யாழ்ப்பாண நகரின் செம்மண் உரும்பிராயில் அட்டத்தனை வளவில் வாழ்ந்த குலசேகரப்பிள்ளை அன்னபூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியாக அவதரித்து **"சோதி"** என்ற நாமம் பெற்று. மூத்த சகோதரி குலமணியோடும் இளைய சகோதரன் சுரேஷ்குமாரோடும் சேர்ந்து மகிழ்ந்து தன் பெயருக்கேற்ப ஒளிவீசுபவராகவே வளர்ந்து வந்தார். இவர் ஆரம்பக்கல்வியை உரும்பிராய் சந்திரோதயம் வித்தியாசாலையில் தொடங்கி. பின்னர் தந்தையின் பணிமாற்ற இடங்களில் கல்வியை கற்று உரும்பிராய் இந்துக்கல்லூரியில் உயர்தரக்கல்வியைக் கற்று முடித்தார். தையல் கலையில் அவருக்கிருந்த மிகையான ஈடுபாடு. அதை முறையாக கற்று டிப்ளோமாவும் பெற வைத்தது அப்போதிருந்தே கண்பார்க்க கைசெய்யும் என்பதற்கிணங்க தையலில் மிகவும் திறமையானவராக இருந்து வந்தார். அலங்காரக்கந்தன் உறைந்துள்ள நல்லூரில் வசித்து வந்த கந்தையா அன்னப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரன் இராசநாயகத்தை 1970ல் மணமுடித்து இல்லறத்தின் மகிழ்வின் பரிசுகளாக காயத்திரி (கௌரி) அனுராதா (அனு) லாயிஷா (ஈஷா) என மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்து நன்மக்களாய் வளர்த்தெடுத்தார். கல்வியின் பயனுணர்த்தி மூவருக்கும் வழிகாட்டியாகவிருந்து பட்டதாரிகளாக்கினார். நாட்டுச்சூழ் நிலையால் நிகழ்ந்த இடம் பெயர்வின் பின்னர் 1996க்குப் பிறகு கொழும்பில் வசித்து வந்தவர் 1998ல் மூத்த மகளுக்கு இலண்டனில் வசித்து வந்த ஸ்ரீ பரணிதரனை மணம் முடித்து வைத்து மருமகனை மகனாகக் கொண்டாடி பாசத்தோடு அரவணைத்துக் கொண்டார். மகனில்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு மருமகனை ஒரு மகனாக இருக்க வைத்தது அவர் காட்டிய அன்பும் அரவணைப்பும் மகளின் வீடு குடிபுகுதல் என்று முதல் முதலில் வெளிநாட்டுப் பயணம் செய்து இலண்டன் வந்திருந்தவர் சில மாதங்கள் வரை மகளோடு தங்கி மகிழ்ந்திருந்தார். அதன் பின்னர் காலம் தாழ்த்தாது அடுத்த மகளுக்கு கொழும்பில் வாழ்ந்த கணேஷ் என்பவரை மணம் முடித்து வைத்தார் தானும் அவர்களோடே தங்கியிருந்தார். பின் மூத்த மகள் மூலம் புத்தம் புது வரவாகக் கிடைத்த பேத்தி லஷ்மி, இரண்டாவது மகள் மூலம் கிடைத்த பேரன்கள் ருபீஷ், யதுஷ் என்று அவர் இலண்டன் இலங்கை என்று போய் வந்தது மட்டுமின்றி நெஞ்சுகொள்ளா மகிழ்வில் கரைந்தே போனார். அடுத்து தன் கடைக்குட்டி மகளை இலண்டனில் வசித்த சந்திரதீபனுக்கு மணமுடித்துக்கொடுத்து லாகித்தியா, பிரனேஷ் என்ற இரு பேரப்பிள்ளைகளையும் தன் கூட்டில் இணைத்துக் கொண்டவர் நெஞ்சில் மகிழ்வைத் தவிர வேறெதுவும் இல்லை அமைதியான வாழ்வின் சுகந்தத்தை தினம் தினம் நுகர்ந்து மனம் நிறைந்து போனார். அவர் கடைசிப்பேரன் பிறக்கையில் வெளிநாடு செல்ல முடியவில்லையே என்கின்ற அவரின் மனச்சுணக்கம் போக்கும் வகையில் மூத்த பேத்தியின் பூப்புனித நீராட்டு விழாவை கொழும்பில் வைத்து உற்றமும் சுற்றமும் சூழ அவர் விருப்பபடியே நிகழ்வை நிகழ்த்தி அவரின் விருப்பப்படியே நிகழ்வை நிகழ்த்தி அவரின் மனக்குறையை போற்றி விட்டார். மகள் கடந்த வருடம் கடைக்குட்டி மகள் ஊருக்கு வந்திருந்த போது சொந்த ஊருக்கு அழைத்துச் சென்று அவர் பிறந்து வளர்ந்த வீட்டில் வைத்து மகளின் பிறந்த நாளைக் கொண்டாடி மகிழ்ந்திருந்தவருக்கு கடந்த ஆவணியில் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பெருவிரலை அகற்ற நேரிட்டது. அப்போதும் எல்லோரும் வியக்கும் வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைரியமாகவே இருந்தார். எந்நேரமும் சுறுசுறுப்புக்குச் சொந்தக்காரியாக இருந்தவரை அழையாமல் வந்தணைத்திருந்த நீரிழிவும் உயர் இரத்த அழுத்தமும் அப்பப்பே பாடாய்ப் படுத்தினாலும் கணவன், பிள்ளைகள், மருமகன்கள், பேரப் பிள்ளைகளுக்கு எந்நேரமும் எல்லாவுமாக இருந்தார் அவர்.

இப்படியிருக்கையில் கடந்த ஆனி மாதம் ஆறாம் திகதி அதிகாலையில் உயர் இரத்த அழுத்தத்தால் மயங்கியவர் பின்னர் தெளிந்து, ஆனி பத்தில் தன் 82வது பிறந்த நாளை மகள், மருமகன், பேரப்பிள்ளைகளோடு சேர்ந்து கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தார். அப்படி இருந்தவர் ஆனி பதினாறாம் திகதி அதிகாலை எவ்வித கஷ்டமும் அனுபவிக்காது இயற்கையும் எய்தி விட்டார். அவரிழப்பு மொத்தக் குடும்பத்துக்குமே ஆறாத சோகம்! இயற்கையை வென்றிட யாருளர்? அவரின் நல் ஆத்மா பர்வதபத்தினி அம்பாள் அனுகிரகத்தில் நித்திய இளைப்பாறுதல் அடையட்டும்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர் புலம்பல்

மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்கலம் நன்மக்கட் பேறு (குறள்:60)

அன்பின் சோதியே,

மேற்சொன்ன திருக்குறளில் குறிப்பிட்டுள்ள படியே என் வாழ்க்கையில் மங்கள ஒளியாக வந்திணைந்த என் துணையே பொக்கிசமாக மூன்று பெண் குழந்தைகளைப் பெற்று கண்ணும் கருத்துமாக நற்பண்பூட்டி வளர்த்தெடுத்து வேலையின் காரணமாக நான் தூரதேசத்திலிருகையில் மொத்தக் குடும்பத்தையும் துளியும் தளராது தாங்கி நின்று நாட்டில் நிலவிய அத்தனை அசாதரண சூழல்களிலும் மிகுந்த மனத்திண்மையோடும் பொறுப்போடும் எம் மகள்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து வழிகாட்டி, நற்கல்வியளித்து, பல்கலைக்கழகம் அனுப்பி பட்டதாரிகளாக்கி என் மனம் குளிரவும் பெருமை கொள்ளவும் வைத்தது மட்டுமா? என்னில் சரிபாதியாய் சகோதரிகளை, பெரியப்பா சித்தப்பாமார்களை யெல்லாம் நேசித்து, உற்றார் உறவினர்களை மலர்ந்த முகத்தோடு வரவேற்று அவர்தம் இடர்களில் ஆறுதலாகவிருந்து எம்மனங்களில் மட்டுமல்லாது அவர்கள் மனங்களிலும் நீங்கா இடம் பிடித்திருந்த என் தெய்வமே இனி எப்பிறப்பில் உம்மை இனி நான் காண்பேன் ! இயற்கையின் அழைப்பிலிருந்து யாராலும் தப்பிட முடியாதென்று விளங்கினாலுமே, உம் பிரிவை ஏற்க மறுத்து நிற்கும் மனத்திற்கு பதில் சொல்லிட முடியாது திண்டாடி நிற்கிறேன் நான் ஒவ்வொருகணமும் உம் ஆத்மா சாந்தியடைந்திட வேண்டியபடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகள் கௌரி புலம்பல்

தெய்வப்பிறவி என்பதன் மொத்த உருவமே என் அம்மா என்பதில் எனக்கு சிறு தயக்கமுமே இல்லையம்மா! உங்களைப் பற்றி எழுத வேண்டும் என்றால் என்னால் முடியவில்லையே! முதலில் நீங்கள் எங்களோடு இல்லை என்பதையே என்னால் ஏற்க முடிய வில்லையே! வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து நினைத்து ஆச்சரியப்பட்டுப் போகிறேனே! எப்படியம்மா உங்களால் அது முடிந்தது!

எனக்கு நினைவு தெரிந்து ஒரு தடவை சரி உங்கள் கை எங்களில் கோபத்தோடு பட்டத்தில்லையே! அடி என்பதன் வலி அறியோமே நாங்கள். பூப்போல பெற்ற குழந்தைகளை பொத்தி வளர்த் தெடுத்தீர்கள் அசையாத நம்பிக்கையோடு அவர்கள் நியாயமான ஆசைகளுக்கு வழி செய்து கொடுத்து ஒரு நல்ல மண வாழ்வையும் ஏற்படுத்தி கொடுத்து எங்களின் குழந்தைகளையும் பராமரித்து என்று. உங்கள் கடமை எங்கள் மட்டில் மூச்சு நிற்கும் மட்டும் நிற்கவில்லையேயம்மா

இங்கு. ஒவ்வொரு விடியலும் உங்களோடு கதைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தானே எனக்கு விடிந்திருக்கும். கதைத்த பின்னரே அன்றைய பொழுது முழுமை பெற்றிருக்கு அம்மா! இனி யாருடன் கதைப்பேன்? "சந்தோசமாக இருங்கள் அம்மா லக்ஷ்மியின் சோதனை முடிய ஓடி வருகிறேன்." என்றேனே அதற்குள் அப்படி என்ன அவசரம் அம்மா? ஒரு முறை உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னம் தடவி கட்டிப்பிடித்து கொஞ்சிட துடித்தேன் மா! மலர் மென்மையாக மொட்டு விடுவது போல அமைதியாய் நிதானமாக உங்கள் சிரிப்பில் மலரும் முகத்தைத் தொட்டுணர முடியவில்லையேம்மா!

இயற்கையும் சேர்ந்து என்னை வஞ்சித்து விட்டதா? மனம் ஆறுதில்லையே! அந்த வடு எப்போது ஆறும் அம்மா? அதை ஆற்றும் வழி கேட்டும் உங்களிடம் தான் வருகிறேன். எனக்கு எந்த விடயத்தில் சந்தேகம், குழப்பம் என்றாலும் உங்களைத் தானே நாடுவேன். இரண்டாம் ஆட்களிடம் கருத்து கேளேனே மா உங்கள் வார்த்தையில் கொண்ட தீரா நம்பிக்கையது! இனி யாருளர் எனக்கு? நினைவு தெரிந்ததிலிருந்து எதையும் உங்களிடம் கேட்டு உங்கள் வழி நடத்தலில் நடந்து வந்தவளை இப்படித் தவிக்க விடலாமா சொல்லுங்க? உங்களிடத்தை வேறொருவரால் நிரப்பிட முடியாதென்றாலும் என்னால் முடிந்தளவுக்கு உங்கள் நிலையிலிந்து என் தங்கைகளை வழி நடத்திட வேண்டும் அம்மா அதனால் இப்போதும் ஒன்றைக் கேட்கிறேன் மா உங்கள் தன்னம்பிக்கை திடம், நிமிர்வு, முடிவெடுக்கும் திறமை என்றெல்லாமே எனக்கு வேணும்மா! அப்படிச் சரி என்னோடு உடன் இருங்கள் அம்மா உங்கள் பார்வை எங்களை விட்டு அசையாதென்ற தீரா நம்பிக்கையோடு அமைதியில் இளைப்பாறிய படி எங்களை வழி நடத்திடுங்கள் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது மகள் அனு புலம்பல்

அம்மா, ஒரு தாய் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கிலக் கணமாக என்னுள் பதிந்து போனவர் நீங்கள் நினைவு தெரிந்த நாளாக உங்கள் செயல்கள் ஒவ்வொன்றாலும் நற்பண்புகளை உணர வைத்தவர் நீங்கள் எங்கள் மூவரதும் செயல்களில் மட்டுமன்றி நினைவிலுமே நல்லதை, நேர்மையை நியாயத்தை ஆழமாக விதைத்தவரும் நீங்கள் தான் அம்மா ஈரைந்து மாதங்கள் சுமந்து அத்தனை உடல் உபாதைகளையும் பொறுத்து உச்ச பட்ச வலிபொறுத்து இவ்வுலகை எங்களுக்கு அறிமுகம் செய்த உங்களுக்கு எங்கள் மட்டில் எத்தனை எத்தனையோ ஆசைகள் கனவுகள் இருந்திருக்கும் அவற்றை உங்கள் மனதளவில் வைத்து இரசித்திடவில்லையே! அவை அனைத்துமே ஒன்றொன்றாக நிறைவேறினவே அம்மா அதன் பின்னால் எங்கள் அம்மா என்னும் இரும்பு மனுசியின் உழைப்பு கணக்கிட முடியாதளவுள்ளது எங்களுக்குத் தெரியும் அம்மா அதோடு சுமங்கலியாக ஒரு ஐம்பது வருடங்களாவது வாழ்ந்திட வேண்டும் என்ற ஆசையோடு, சுமங்கலியாகவே மூச்சை விடவேண்டு மென்ற அவாவும் உங்களுள்ளே இருந்ததே. நல்லாத்மா நீங்கள்! அது கூட நிறைவேறியது பாருங்களேன். அக்காவும் தங்கச்சியும் வெளிநாடு சென்ற பின்னர் உங்களோடு நான் கழித்த நாட்கள், அதுவும் கணவர் குழந்தைகள் என்றான பின்னர் பொறுப்பான ஆசிரியர் பணியையும் திறம்பட செய்து கொண்டே நல்மனைவியாய் அன்னையாய் நானிருக்க உங்கள் துணை இருந்தும் முக்கிய காரணமாக என் பிள்ளைகள் மீதான உங்கள் கவனிப்பு எப்போதும் போலவே என்னைக் கவனிப்பது என்று நீங்கள் ஓய்ந்திருந்து நானறியேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு செய்தவற்றில் சிறுதுளி அளவேனும் திருப்பிச் செய்ய, என் அம்மாவை இருத்தி வைத்துப் பார்க்கும் பாக்கியம் கிடைத்த போது அதற்கும் கலங்கி நின்றீர்கள், "வேலை, பிள்ளைகளிட அலுவல்கள் எண்டு திரியிற என்ர பிள்ளைக்குக் கரைச்சல் என்று எத்தனை எத்தனை வேலைகள் இருந்தாலும் நீங்களும் என் குழந்தை என்ற எண்ணமே என்னுள்! நீங்கள் வளர்த்த வளர்ப்பு வேறெந்த எண்ணத்தைத் தரும் சொல்லுங்க

"அனு காலை நாலரைக்கு தேத்தண்ணி தந்திருவாள்" என்று எல்லோருக்கும் சொல்லுவீர்களே! இனி யாருக்குக் கொடுக்க? தினம் உங்கள் கோப்பை தேனீரை நிறைத்துக் கொண்டு உங்கள் கரத்தின் தொடுகைக்காக ஏங்கிக் கிடக்குதம்மா! " தொண்டை கொஞ்சம் வறலுற மாதிரிக்கிடக்கு ஒரு தேத்தண்ணி தாம்மா?" என்ற உங்கள் குரல் என் காதுகளை உரசிக் கொண்டேயிருக்குதே! அடிக்கடி உங்கள் அறைக்கு ஓடுகின்றேன், வெறுமை முகத்தில் அடிக்கும் என்று தெரிந்தே! உங்களுக்கு எல்லாம் விளங்கியிருத்ததாம்மா? பிரிவை உணர்ந்திருந்தீர்களா? "நான் கனகாலம் இருக்க மாட்டேன் நீ தான் எல்லாம் பார்க்க வேனும்" என்று அடிக்கடி சொன்னது அதனால் தானோ! நீங்கள் உடனில்லாத அறிமுகம் அற்ற பொழுதுகள் வெறுமையோடு கரைந்து செல்கின்றன உங்கள் அளவுக்கில்லை என்றாலும் என் பிள்ளைகளுக்கான கடமைகளை நிறைவேற்றும் அவசிய முணர்ந்து என்னை நான் மீட்டிட போராடிக்கொண்டிருக்கிறேன். உடல் மறைந்து விட்டாலும் என் அம்மாவின் பார்வை என்றென்றும் என்னுடன் இருந்து என்னை வழி நடத்தும் என்ற பெரு நம்பிக்கையோடு! இயற்கையில் இளைப்பாறியபடி எங்களை வழி நடத்திடுங்கள் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாவது மகள் ஈசா புலம்பல்

"அம்மா" என்றதும் என் அம்மாவின் உருவத்தோடு போட்டி போட்டுக் கொண்டு அவர் எப்போதும் சொல்லும் இரு விடயங்கள் நினைவிலாடும். ஒன்று "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச் சான்றோ னெனக்கேட்ட தாய் என்ற திருக்குறள் அடுத்தது "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே... அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே என்கின்ற திரைப்பட பாடல் வரிகள் அடிக்கடி அம்மா சொல்லும் இவ்விரு விசயங்களும் இப்போதும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

முதலாவதில் உள்ளதைச் சொல்லி தன் மனதிலுள்ள ஆசையை எங்களுள் விதைத்த அதேவேளை இரண்டாவதி லுள்ளது போல தன் வளர்ப்பில் கொஞ்சமும் கவனம் சிதறவில்லை எங்கள் அம்மா கண்டிப்பையும் அன்போடு கலந்து காட்டி உற்றமும் சுற்றமும் பார்த்து ஆசைகொள்ளும் வகையில் எங்களை வளர்த்து விட்டவர் அவர் எப்படி வாழவேண்டும் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டிய அவர், எத்தனை எத்தனையோ இடர்களின் மத்தியில் எங்கள் மூன்று பேரையும் வளர்த்தெடுத்தது போல் எங்கள் குழந்தைகளை நாங்கள் வளர்த்தெடுப்பதை நினைக்கையில் மலைப்பாகத்தான் இருக்கின்றது. "ஈஷாக்குட்டி" என்று அன்போடு அழைப்பவர் எனக்கு இரு குழந்தைகள் பிறந்த பின்னும் தன் கடைக்குட்டிக் குழந்தையாகவே என்னைப் பார்த்து வந்தார். என் ஒவ்வொரு வளர்ச்சியிலும் ஆனந்தித்து சந்தோசக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரோடு மகிழ்ந்து போகும் அம்மா, நான் "அம்மா" என்றழைக்கும் தொணி வைத்தே என் மனநிலை அறிந்து விடுவாரோ! அறிவுரை, ஆறுதல் தேறுதல் என்றெல்லாவற்றுக்கும் எங்களுக்கு அவரொருவர் தானே இனி என் செய்வோம்!? அருகிலமர்த்தி என் கையைத் தன் மடியில் வைத்து தடவும் அம்மாவுக்கு அவர் அண்மைய தரும் இததுக்கு, பலத்துக்கு நான் இனி எங்கு போவேன்? அவர் எம்மை விட்டுப் போய்விட்டார் என்பதை ஏற்க முடியாது திண்டாடித் தவிக்கையில் அம்மா எங்களை வளர்த்தது போல் என் குழந்தைகளையும் நான் வளர்க்க வேண்டுமென்ற ஒரே ஆசை என்னை இந்தப் பேரிழப்பிலிருந்து நிலைப்படுத்த முயன்றாலும் முடியவில்லையே! உலகையே உலுக்கி நிற்கும் கொரானா, எங்களுக்கும் சதி செய்து விட்டது. இல்லையேல், இறுதியாக அம்மாவின் முகத்தை நேரில் பார்த்திட அவர் கன்னம் வருடி பிரியாவடை கொடுத்திட எங்களுக்கொரு வாய்ப்பிருந்திருக்குமே! இப்பேரிழப்பிலிருந்து மீண்டு விடும் வித்தையறியாது தவித்து நிற்கும் நான், எங்கள் பர்வதபத்தினி அம்பாள் துணையால் என் அம்மாவின் ஆத்மா நித்தியமாய் இளைப்பாறிட வேண்டுமென்று வேண்டி நிற்கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி புலம்பல்

அக்காமார் இருவருடன் பிறந்தேன் இன்று இருவரையும் தொலைத்து தனி மரமாக நிற்கின்றேன் மனோ மனோ என்று பாசமாக அழைப்பீர்களே இன்று உங்கள் குரல் கேட்காமல் தவிக்கின்றேன். 1995ல் இடம் பெயர்வில் உங்களைத் தவறவிட்டு சென்ற என்னைத் தேடிக்கண்டுபிடிக்க நீங்கள் பட்ட பாட்டினை நான் எண்ணுகின்றேன். உங்கள் பிள்ளையைப் போல தான் என்னைப் பார்த்தீர்கள் இனி யார் என்னைப் பார்ப்பார்கள். நீங்கள் நோய்வாய்ப்பட்டுபடுத்திருந்த அந்தநாட்களில் கூட எந்நேரமும் மனோ மனோ என்று நீ சாப்பிட்டியா? ஏன் படுத்திருக்கிறாய் மருந்து போட்டனீயா என கேட்பீர்கள் உங்களுக்கு மருந்து எடுத்து தருவதே எனக்கு ஒரு சுகமான சுமையாக இருந்தது நீங்கள் என்னில் கொண்ட அன்புக்கு நிகரில்லை நீங்கள் இல்லாத வீடு ஜோதி இழந்து இருளாக இருக்கின்றதே அக்கா
எப்பிறவியில் உங்களை இனி காண்பேன்.

அன்புத்தம்பி
மனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன்மார் புலம்பல்

மாமி உங்களின் இரு மகள் மாரையும் நாம் இருவரும் திருமணம் செய்து உங்களை எங்கள் இரண்டாவது தாயாகப் பெறும் பாக்கியம் பெற்றோம் எங்களை பெயர் சொல்லி நீங்கள் கூப்பிடுவது குறைவு எப்பொழுதும் தம்பி என்று தான் கூறுவீர்கள். கௌரி யாருடன் கதைக்கிறீர்கள் என்று கேட்டால் அம்மாவுடன் என்று கூறுவது எனக்கு காதில் கேட்கின்றது இன்று உங்கள் அன்பு மகள் அழுது புலம்புவது கேட்கவில்லையா? காலம் செய்த கோலத்தால் உங்களை கடைசி நேரம் பார்க்க முடியாமல் போய்விட்டதே மாமி நான் அம்மாவுடன் கதைக்கிறேன் பிள்ளைகளைக் கொஞ்ச நேரம் பாருங்கோ தீபன் என்று ஈஷா கூறும் போது அவவின் முகத்தில் பெருமிதம் தெரியும் ஆனால் இப்பொழுது அந்தப் பெருமிதம் இல்லாமல் அவாவை என்னால் ஆறுதல் படுத்த முடியாது உள்ளது. நாட்டிற்கு நாங்கள் வரும் பொழுது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தீர்கள் ஒவ்வொரு வருடமும் வருவோம் என்று கூறிச் சென்றோம். ஆனால் உங்களைக் காணவே முடியாது என்பது எங்களுக்கு இப்போது முடிவாய் உள்ளது. தீபனுக்கு தோசை விரும்பம் சுட்டுக் கொடு ஈஷா என நீங்கள் கூறுவீர்களே மாமி உங்கள் இறுதிச்சடங்கில் கூட கலந்து கொள்ள முடியாத பாவிகளாகி விட்டோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

மருமகன்மார் } பரணி, தீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2வது மருமகன் புலம்பல்

தம்பி வந்திட்டீங்களே என்னும் உங்கள் கணீர் ஒலி என் காதில் கேட்கின்றது தேடிப் பார்க்கின்றேன் காணவில்லையே உங்களை எனக்கு அம்மா இல்லை என்பதால் உங்களை அம்மாவாக எண்ணினேன். நோய் வாய்ப்பட்ட பொழுது இரவு பகல் பாராது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றேன் உங்களைச் சுகப்படுத்துவதற்கு நான் வீடு வர நேரம் சென்றால் கணேசுக்கு Phone பண்ணிகேள் ஏன் வரவில்லை என நீங்கள் கரைச்சல்ப்படுத்துவீர்கள் இனி யார் என்னைத் தேடுவார்கள் அப்பக்கடையைக் கண்டால் உங்கள் நினைவு என்னை வாட்டுகிறது. நல்ல அப்பம் தம்பி என நீங்கள் கூறுவது கேட்கின்றது. இறுதியாகக் கூட நான் யாழ்ப்பாணம் போய்ட்டுவரட்டா மாமி எனக் கேட்க ஓம் தம்பி என்றீர்கள் அது தான் நான் உங்களுடன் கதைக்கும் கடைசி வார்த்தை என்று தெரியாது தெரிந்திருந்தால் நான் யாழ்ப்பாணம் சென்றிருக்கவே மாட்டேன் குழந்தைகளாக இருக்கும் போது பிள்ளைகள் வளர்ப்பது எவ்வளவு கடினம் என நண்பர்கள் கூறும் போது எனக்கு விளங்குவது இல்லை ஏனென்றால் எனது பிள்ளைகளை வளர்த்தது நீங்கள் தானே நீங்கள் இருக்கும் துணிவில் நான் எங்கும் சென்று வருவேன் எல்லாவற்றையும் இலகுவாக எடுத்துக் கொள்ளும் நீங்கள் மரணத்தையும் இலகுவாகவே சந்தித்துள்ளீர்கள் மாமி உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மருமகன்
கணேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

அம்மாவுக்குச் சரிநிகரானவர் அம்மம்மா என்று யாராவது சொல்லியிருந்தால் அதை முழுதாக நம்பி ஏற்றிருப்போமோ தெரியாது அம்மம்மா, நீங்கள் எங்களது நினைவு தெரிந்த நாளிலிருந்தே அதை ஒவ்வொரு கணமும் சிறு சிறு செயல்களிலும் உணர வைத்தவர் அம்மாவின் கண்டிப்பில் மனம் சிணுங்கி நிற்கையில் எல்லாம் கொஞ்சமும் தாமதியாது ஆதரவாக அரவணைக்க உங்கள் கரம் நீண்டிடுமே! சோறூட்டிப் பாராட்டிச் சீராட்டி எங்களுக்கிணையாக எல்லாவுமாக இருந்த நீங்கள் இக்கணம், எங்களோடில்லை என்பதை ஏற்றிட முடியாது திண்டாடி நிற்கின்றோமே! வீட்டை விட்டு வெளியேறுகையில் எல்லாம் பழக்க தோசத்தில் போட்டு வாறம் அம்மம்மா என்று சொல்லிட நா உன்னி நிற்கிறது தெரியுமா? “கவனம் போட்டு வாங்கோ” என்ற உங்கள் அன்பு தோய்ந்த குரலைக் கேட்டிட மனம் பேராவல் கொண்டு ஏமாந்து திண்டாடுதே அம்மம்மா! களைத்து வேர்த்து வருகையில் உங்கள் கைப்பக்குவத்தில் இதமாக தாகம் தணிக்கும் தேசிக்காய் தண்ணி இப்போதெல்லாம் டிம் விழிகளைக் கசிய வைத்து விடுகின்றதே! வெளிநாட்டிலிருந்தாலும் எப்போதுமே லக்ஷ்மி அக்காவையும் லாகித்தியா, பிரனேஷையும் தேடாது இருந்தில்லை நீங்கள் தினமும் அவர்கள் பற்றிக் கதைக்காதிருந்ததும் இல்லையே! அவர்கள் விடுமுறை என்று வந்து விட்டால் உங்களுக்குத் தானாகவே சுறுசுறுப்பு வந்து விடுமே! ஆசை ஆசையாக பிடித்த சமையல் சாப்பாடு என்று சமைத்து ஒவ்வொருவருக்கும் ஊட்டி விட்டு பேரப்பிள்ளைகள் ஐவரையும் பெருமை பொங்க கட்டிக்கொள்ளும் உங்களை எங்களோடு சேர்த்து அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுகின்றார்கள். அம்மம்மா எப்பக்கம் திரும்பினாலும் எங்கள் அம்மம்மாவின் ஒவ்வொரு செயல்களும் நினைவூட்டி நிற்க உங்கள் உருவெங்கே என்று தேடிக் கைத்து உண்மை உறைக்க துவண்டு கிடக்கிறோம் நாங்கள் ஐவரும் உங்கள் பார்வையில் படாதிருந்தாலும் உங்கள் அன்பும் ஆசியும் என்றென்றும் எங்களுக்குத் துணையாக நிற்கும் என்ற நம்பிக்கையோடு உங்களோடு கழித்த அழகிய நினைவுகளின் துணையோடிருந்து எங்கள் அம்மம்மாவின் ஆத்மா சாந்தியடைய வணங்குகிறோம்.

லக்ஷ்மி, றுபீஷ், யதூஷ்
லாகித்தியா, பிறணேஷ்

---

## *I'm talking about you ammama*

When I close my eyes, l always have this clear picture of you with your smile and your big beautiful eyes laughing at my jokes. But I didn't love you because you listened to all of my jokes or that you were kind, smart or creative I loved you because you had the biggest heart of them all You were the best sewer and the only reason why I wanted to get into art and design. You always used to tell me, that your first time making a piece of clothing was when you were only 8 years old. One of my favourite memories of you was when I sewed a dress and just hearing how you were so happy made me think of how the little things are the most important. Hearing your smile form and tears of joy being let out was one of he greatest gifts I could of asked for and one I will never forget. I never knew the value of that moment until it became a memory. Another was when Learnt to cook dosa in your kitchen and I remember looking up and seeing your smile



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

form on your face and I know they only say it in the movies but I genuinely believe I saw a sparkle in your eyes and I am forever grateful for that moment. When I think of you I just hope one day I could become a woman like you were I just hope wherever you are, May you continue to be bold. May you still be brave. may you be loving and joyful and kind. may you keep containing to carry the life and spirits of the generations before you. May you continue to always let your faith be greater than you fear you never let me forget, through all of life's adventures through every moment of every day, that you would walk beside me cheering me on, you would hope for me, pray for me and never stop loving me. having you was really like winning the lottery and is one of the biggest gifts anyone could have given me. You were kind, funny, stubborn and beautiful and I talk to you everyday, but I get no replies losing you made me sad, angry, confused and broke my heart in two, one was filled with pain and the other died with you, and I know that hurt won't ever go away but there will come a day when I do'nt feel it every minute, and the other feelings will fade. and that's what we call love. but when it comes to love, there's always a risk and today we all found out that the risk is losing them. every one in my family knows, you were the one in charge, everyone in the family had a desire to be as strong as you. You loved your family not because you had to, but because you chose us in the face of a million obstacles you chose your family.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When you felt like giving up you chose your family. and you kept choosing your family. In the face of every single twist and turn life brought you, every single day, and that is not a coincidence. That is not fate. That is love and I'm talking about you ammama went through, through stormy days and sunny skies, my ammama earned her happy ending.

***Grand Daughter***
***Luxmi***

---

# *My ammama*

I love my ammama, she has a warm heart. when she was only 8 years old, she started sewing and worked very hard. The best bit about her is she has sewed for 72 years. If it is one of our birthdays, she sends us really nice handmade clothes. This year for my birthday I did not receive any clothes form my ammama because she sadly passed away she passed exactly 11 days before my birthday, however I still have the handmade clothes my ammama made for me. I love those clothes so much and every year for my birthday, I will hug those clothes to receive a blessing from my ammama.

***Grand Daughter***
***Lahithiya***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *The best grand mother*

You were a wife, a mother but above all you were the best grand mother of them all. I miss seeing your smile every time I called you ammama. I miss running to the phone every time you called I miss receiving your parcels with all the clothes you made for me, Even though I was the youngest of them all l loved you the most.

**Grand Son**
**Branesh**

## மைத்துணிமார் புலம்பல்

எங்கள் குடும்பத்தில் இணைத்து கொண்ட முதலாவது லக்ஷ்மியாக எங்களுடன் அன்போடும் ஆதரவோடும் நடந்து கொண்ட பண்பினை நினைக்கும் போது நெஞ்சம் கனலாய் கனக்கிறது அரை நூற்றாண்டுக்கு மேலாக எங்கள் குடும்பத்தில் ஒருவராக இருந்து எங்கள் குடும்பத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வினையும் பொறுப்புடனும் சிறப்புடனும் நடத்திய பெருமை உங்களுடையதே அதுமட்டுமல்ல எங்கள் உறவினர்களையும் அன்போடு அரவணைத்ததை அவர்களே சொல்லிப் பெருமைப்படுவார்கள் இது மட்டுமல்ல எங்கள் சகோதரரின் வாழ்வு சிறப்புற அன்பாக நடத்திய பெருமையும் உங்களையே சேரும் இன்று அவர் உங்களை இழந்து தவிப்பதை பார்க்க முடியாமல் இருக்கிறது. எல்லாவற்றைக்கும் மேலாக தன் பிள்ளைகள் மூன்றையும் மூன்று முத்துகளாக படிப்பித்து பட்டதாரிகளாக ஆக்கிய பெருமை உங்களையே சேரும் உங்கள் எச்சங்களான மக்கள் செல்வங்கள் சீரும் சிறப்புடனும் வாழ்வதே இறைவன் உங்களுக்கு அளித்த அருள் என நினைத்து உங்கள் இழப்பினால் உண்டாகும் மனக்கவலையை மறந்து ஆறுதல் அடைவோம்.

உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனை இறைஞ்சுவோமாக

ஓம் சாந்தி சாந்தி

மாங்கையக்கரசி மகாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் புலம்பல்

அன்பான மாமி மன்னிக்கவும் அவவை மாமி என்று அழைப்பது அல்ல அன்ரா அன்பு அன்ரா என்று தான் நான் அழைப்பேன் எங்கள் வீட்டில் என்ன நடந்தாலும் அன்ராவின் அபிப்பிராயம் தான் கடைசியில் முடிவு எனக்கு என்ன செய்யவேணும் என்றாலும் அவரைப் போய் கேட்பேன் என்ன விதமான சாறியோ நகையோ வேண்ட வேனும் என்டாலும் கேட்பேன் அவ தான் எங்களுக்கு குருவாக இருந்து சொல்லுவா நான் தொலைபேசியில் கதைத்தால் சந்தோஷமாக என்னுடன் கதைப்பா இனி எனக்கு யார் சொல்லுவார்கள் இனி நான் யாரை அன்ரா என்று கூப்பிடுவேன் நெஞ்சு பதைபதைக்கிறது அவ எங்களுடன் இல்லை ஆனால் அவ செய்த ஒவ்வொரு செயலும் அவவை நினைவூட்டிய வண்ணம் இருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி சாந்தி

தபோ ஸ்ரீரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமகளி குஞ்சா புலம்பல்

அன்பின் உறைவிடமே அன்ரா என் தாயே
அரவணைப்பின் சிகரமே என்னை தூக்கி வளர்த்த என் தெய்வமே அறிவுரை ஊட்டிய அருமை மிகு தாயே அன்ரா ஆழ்ந்த சிரத்தையும் குழந்தை உள்ளமும் கொண்டவர் எனது அன்ரா அன்புத்தாய். எனது சிறுவயது முதல் இன்று வரை என்னில் உயிரான எனது உயிர்தாய் அன்ரா.

என் தாயை நான் இழந்து மூன்று மாதங்கள் ஆகவில்லை என் அன்ரா என் தாய் இருக்கின்றா என்ற ஒரு தென்பில் எனது சோகம் மறக்க நினைத்த நேரத்தில் நீங்களும் என்னை விட்டு சென்றது என் வாழ்வில் நானடைந்த மிக பெரிய கவலை என் தாயே அன்ரா

என்னை உங்களின் மூத்த மகளாக நினைத்து தான் நீங்கள் அன்பு காட்டுவீர்கள். சட்டை தைப்பதனாலும் முதல் எனக்கு தைத்த பின்பு தான் உங்கள் பிள்ளைகளுக்கு தைப்பீர்கள். உங்களின் மூன்று பெண் பிள்ளைகளாக இருந்தாலும் என்னையும் உங்கள் மூத்த பிள்ளையாக என்றும் நினைப்பீர்கள் நினைத்தால் நெஞ்சு துடிக்குதம்மா என் அன்ரா என் தாயே.

என் கணவர், பிள்ளைகளையும் நீங்கள் என்றும் அன்பாக பாசம் காட்டி நேசக்கரம் நீட்டுவீர்களே என் அன்றா என்னை ஆறாத துயரத்தில் ஆழ்த்தி விட ஏன் துடித்தாய் என் தாயே அன்ரா இன்னல் வந்த நேரம் உன் புன்னகை ஆறுதல் சொல்லும் இனிமேல் எனக்கு ஏது ஆறுதல் அன்ரா என் தாயே! ஈகை குணம் உள்ளவரே ஈர உள்ளம் கொண்டவரே என்தாயே அன்ரா ஈடில்லா உண்மை முகம் கொண்டவரே என் தாயே அன்ரா.

உம்மை மீண்டும் எப்போது இனிக் காண்பேன் என் தாயே

அன்ரா! அன்ரா! அன்ரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரமக்கள் புலம்பல்

எங்கள் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும் அன்ரா நீங்கள் எங்களுடன் வாழ்ந்த நாட்களும் நினைவுகளும் நிலையானவை நீங்கள் எங்களுக்கு செய்த நன்மைகள் எண்ணி முடியாதவை எங்கள் சிறு வயதில் இருந்தே எங்களை நல்ல முறையில் வழி நடத்தி புத்திமதிகள் பல கூறி இவ்வுலகில் நாங்கள் நல்ல மனிதர்களாக வாழ வழிகாட்டிய தாய் நீங்கள் எங்களுக்கு இன்னொரு தாயாக இருந்து எங்களை வளர்த்தீர்கள் எங்களுக்கு விதம் விதமாக சட்டைகள் தைத்துப் போட்டு பார்த்து மகிழ்ந்தீர்கள் அன்ரா, அதையே எங்கள் பிள்ளைகளுக்கும் செய்தீர்கள்.

எங்கள் நன்மைகள் எல்லாவற்றையும் முன் நின்று செய்து நாங்கள் சந்தோஷமாக வாழ்வதை பார்த்து மகிழ்ந்தீர்கள் அன்ரா நாங்களும் எங்கள் சந்தோஷம், துக்கம் எல்லாவற்றையும் உங்களுடன் தான் பகிர்ந்து கொள்வோம் இனி எங்களுக்கு யாருமே இல்லை சிறகுடைந்த பறவைகளாக எங்களை தவிக்கவிட்டு ஏன் சென்றீர்களோ?

எங்கள் அம்மாவின் இழப்பை தாங்க முடியாமல் நாங்கள் தவித்து நின்ற போது எங்களை ஆரத்தழுவி அணைத்து அழாதீர்கள் நான் இருக்கிறேன் உங்களுக்கு என்று ஆறுதல் கூறுனீர்கள் நாங்களும் அன்ரா இருக்கிறா எங்களுக்கு என்று இருக்கும் போது திடீரென உங்கள் இழப்புச் செ சாய்தி கேட்டதும் பேரதிர்ச்சிக்குள்ளானோம் நாங்கள் யாருமே இல்லாத அனாதைகளாகிவிட்டோம். எங்களுக்கு ஆறுதல் கூற இனி யாருமே இல்லை உங்கள் நினைவுகள் எத்தனை வருடங்கள் சென்றாலும் எம் இதயத்தில் இருந்து அகலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் இறைவா எமக்கு இப்படியோர் அன்பான அன்ராவை தந்ததற்கு எந்நாளும் உமக்கு நன்றி நாட்கள் பல ஆனாலும் உங்கள் நிழல்கள் அழியாது ஓயாது உங்கள் நினைவு எம்மை வந்து துடி துடிக்க வைக்குதன்ரா? உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

பெறாமக்கள்
பவானி, குமுதா, பாலா

---

# அன்ரா

அன்ரா அன்ரா என தினமும் ஓடி வருவேன் உங்களிடம் இப்போ ஓடி வர அன்ரா இல்லையே ஒரு நாள் உங்களை பார்க்க வரவில்லை யென்றால் தம்பி ஏன் இன்று வரவில்லை என்று கேட்பீர்களே இப்ப கேட்பதற்கு அன்ரா இல்லையே அம்மா ஸ்தானத்தில் நீங்கள் இருந்தீர்கள் இப்போது எனக்கு அம்மாவும் இல்லை நீங்களும் இல்லையே என் கஷ்டங்கள், கவலைகள் கூறுவேன் இப்போ அன்ரா இல்லையே இனி எப்போ அன்ராவை நான் காண்பேன் என்போதும் அன்ராவை நான் மறவேன்.

அன்பு மகன்
வசந்தன் (தம்பி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிமாரின் தோழி புலம்பல்

இறப்பு தவிர்க்கவே முடியாதொன்று எதிர் கொண்டே ஆகவேண்டியது. நன்றாகவே தெரிந்தாலும் சில இறப்புகள் தரும் துக்கத்தைத் தாங்கிக் கடப்பதுவும் கடினமே!

இன்று காலை அப்படியொரு துக்கச் செய்தி கிட்டியது ஆன்ட்டியின் இழப்பை ஏற்றுக் கொள்ள மனம் மறுக்கின்றது.

ஒன்றாகப் படித்திருந்தாலும் 95 இடப்பெயர்வுக்குப் பின்னர் குடும்பங்களின்றி பல்கலை விடுதியிலிருந்த காலப்பகுதியில் தான் காயாவுடன் (காயத்திரி) நெருங்கிய நட்புண்டாக்கியதா இருவரும் பக்கத்துப் பக்கத்தறைகளில் இருந்தோம். அதன் பின்னர் அனு (காயத்திரியின் மூத்த தங்கை) பல்கலையில் இறுதி வருடங்கள் படிக்கையில் என்னோடு தானிருந்தாள் இருவரும் பல்கலைக் கழகத்துக்கு முன்னால் அறையெடுத்துத் தங்கியிருந்தோம் நண்பியின் தங்கை என்று அறிமுகமாகியவள் என் சொந்தத் தங்கைகளில் ஒருத்தியாகி விட்டாள்.

பின்னர் 99ல் கொழும்பு சென்ற போதே காயா வீட்டினரோடு எனக்குப் பழகும் சந்தர்ப்பம் கிட்டியது. அப்போது காயா அங்கிருக்கவில்லை திருமணமாகி இலண்டன் வந்து விட்டாள் இருந்தாலும் அந்த வீடு தம் பிள்ளைகளில் ஒருத்தியாகவே என்னையும் உள்வாங்கியிருந்தது. அன்றிலிருந்து 2003 முதலாம் திகதி நான் வெளிநாடு வரு வரையில் எத்தனை எத்தனையே சந்தர்ப்பங்களில் வார்த்தைகளைக் கடந்த ஆறுதலாக இருந்துள்ளது. ஆன்டியின் பாசமும் அன்பும் அக்கறையும் எவ்விதமான பிரதியுகாரமும் பாராத அன்பை வழங்க எல்லோராலும் மிக மிகச் சாதாரணமாகவே முடிந்தது. எங்கள் சிநேகிதி அங்கில்லாத போதும் அந்த வீடு தேடி எங்களைச் செல்ல வைத்தது அதுதான் அமைதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மணி! அந்த அமைதிக்குப் பின்னால் மிக்க உறுதியான பெண்மணி ஒளிந்திருந்தார் அத்தனை அத்தனை பிரச்சனையான காலகட்டத்திலும் மூன்று மகள்களையும் அருமையாக வளர்த்தெடுத்ததே அதற்கு காரணம்.

"பிள்ளை" இப்படித்தான் பொதுவாக விளிப்பார்"
ஒவ்வொரு வார இறுதியிலும் ஒரு தடவையேனும் அவர் கையால் உண்ணாதிருந்ததில்லை அக்கறையாக உபசரிப்பது போலவே தேவையான பொழுது மென்மையாகவே கண்டிப்பையும் வெளிப்படுத்தும் பக்குவம் கொண்டவர். அவரோடு பழகிய அவரின் மூன்று மகள்களின் அத்தனை தோழியரும் ஒரு மித்து நான் சொன்னதையே சொல்வார்கள்

எங்கள் ஒவ்வாருவரிடமும் அவர் பற்றிச் சொல்ல மிக நீண்ட கதைகளுண்டு நாங்கள் இருக்கும் வரை அவையும் கூடவே வரும். பசுமையான எதிர்பாராத இழப்பு, காயாவுக்கும் இளைய சகோதரிக்கும் இலங்கை சென்று இறுதியாக ஒருதடவை பார்க்க முடியாத நிலை அவர்களின் இழப்புக்கு துயருக்கு மருந்திட எங்கள் வார்த்தைகள் நிச்சயம் பற்றாது நாங்களும் துயரைப் பகிர்ந்தாலுமே ஈடு கட்டிட முடியாது அவர்களின் துயருக்கு மருந்திட ஆன்ட்டியால் மட்டுமே முடியும் அவர் காட்டிய அன்பும் பாசமும் கரிசனையும் நிச்சயம் ஒத்தடமாக மாறி ஆறாத துயரிலிருந்து மீட்டெடுக்கும் என்று நம்புவோம்.

"ஆன்ட்டி" என்று சொன்னாலும் ஒவ்வொரு சிறு சிறு சந்தர்ப்பங்களில் பெற்ற தாயாக உணர வைத்தவர் இயற்கையின் நிழலில் நித்தியமாக இளைப்பாறட்டும்!

**"ரோசி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தடிகள் புலம்பல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திப் பகலாய்ச் சிவனை ஆதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்?

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள் மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே – அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்
தனக்கோ மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நான் இடுவேன், ஆத்தாள் தனக்கு?
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலை மேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்? மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி "என்றன்
மகனே" என் அழைத்த வாய்க்கு?

முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயிதனில், வெந்துபொடி சாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ! மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்?

வீற்றிருந்தாள் அன்னை, வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள், இன்னுவெந்து நீறானாள், பால் தெளிக்க,
எல்லீரும் வாருங்கள்! ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் (50)
நிலவுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவன் திருவடி
நீழல் எய்திய அன்புத் தெய்வம் அமரர் சோதி.இராசநாயகம்
அவர்களின் இறுதி யாத்திரையின் போது கலந்து
கொண்டோருக்கும் உள்நாட்டிலிருந்தும்
வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் நேரடியாகவும், தங்கள்
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும்
மலர்கள், மலர்மாலைகள், மலர் வளையங்கள் கண்ணீர் அஞ்சலி
பிரசுரங்கள், அஞ்சலி உரைகள் தேவார திருவாசக
பாராயணங்கள் வழங்கியோர் அபரக்கிரியைகள் மேற்கொண்ட
அந்தணப் பெருமக்கள் ஆகியோருக்கும் நடைபெற்ற அந்தியேட்டி
சபிண்டிகரண கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும்
ஆத்மசாந்தி பிரார்த்தனைகளில் ஈடுபட்ட அனைவருக்கும்
எங்களின் துன்பத்தில் உடன் இருந்து ஆறுதல் கூறிய
உறவினர்கள், ஊர்மக்கள், நண்பர்கள் எல்லோருக்கும் எமது
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


*காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது (102)*

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

*குடும்பத்தினர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் தத்துவம்

போவதைக் கண்டு கலங்காமல் வருவதைக் கண்டு
மயங்காமல் பயந்து பயந்து நடுங்காமல் கோபத்தால்
குதிக்காமல் இருக்கிறானோ அந்த மனிதன் தான்
உறுதியான அறிவு வாய்ந்தவன்

விளைந்து வரும் உள்ளமதில் விருப்பங்களை துறந்து
தன்னுள்ளே தானாகி தனக்குள்ளே மகிழ்ச்சி
பெற்றால் அப்போது அவன் நிலையான புத்தி
உடையவன் என அழைக்கப்படுகிறான்

ஒருபக்கம் நன்மை ஒருபக்கம் தீமை இரண்டிலும்
வீழ்ச்சி அடையாதவனாய் என்ன என்ன
என்று ஆவல் அடையாதவனாய் வெறுப்பில்லாதவனாய்
எவன் இருக்கின்றானோ அவன் அறிவே நிலையானது

தேவை ஏற்படும் போது ஆமை தன் உடம்பை
ஓட்டுக்குள் இழுத்துக் கொள்கின்றது. அதுபோல
எப்போதும் தன் ஐம்புலன்களையும் உணர்ச்சிகள்
தாக்காமல் எவன் மீட்டுக் கொள்கிறானோ
அவன் அறிவே நிலையானது



இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்
பகவான் ஸ்ரீகிருஷ்ணர்

சிறீலக்ஷ்மி பிறிண்டேர்ஸ் பலாலிறோட், ஊரெழு T.P. 0777 242168

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org